ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :27 July 2025
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்[1], பி.பாவேந்தன்[2]

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு[1], முனைவர் அ. மரிய செபஸ்தியான்[2]

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா[1], முனைவர் அ.மரிய செபஸ்தியான்[2]

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி

# *Periyapuraanathirkku Aniseiyum Siledaiyani*

***Author:*** *V. V. Sujatha, Research Scholar,*

***Research Supervisor: Dr. R. Pannirukaivadivelan****, Associate Professor, Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Pallavaram, Chennai - 600 117.*

***Abstract***

*Pun is when a word or phrase has two different meanings. Pun is also called double entendre. Puns are used to further polish the elegance of literature. This article deals with the manner in which Sekizhar has handled Siledayani in Thiruthondapurana, known as Periyapurana.*

***Keywords:***

*Literature, Grammar, Siledayani-Bilingualism, Periyapuranam.*

**கட்டுரையாளர்: வே.வெ.சுஜாதா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

**நெறியாளர்: பேரா.இரா. பன்னிருகைவடிவேலன்**, தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மேல்நிலைக் கல்விக்கழகம், பல்லாவரம், சென்னை - 600 117.

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு சொல் அல்லது சொற்றொடரானது இருவேறு பொருள்படும்படி அமைவதை சிலேடை என்பர். சிலேடை என்பதை இரட்டுற மொழிதல் என்றும் கூறுவர். சிலேடையணி இலக்கியத்தின் நயத்தை மேலும் மெருகூட்டுவதற்காக பயன்படுத்தப்படுகிறது. பெரியபுராணம் என்று அழைக்கப்படும் திருத்தொண்டர்புராணத்தில் சேக்கிழார், சிலேடையணியை கையாண்டுள்ள விதம் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:**

இலக்கியம், இலக்கணம், சிலேடையணி-இரட்டுற மொழிதல், பெரியபுராணம்.

**முன்னுரை**

தொல்காப்பியம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் பல இலக்கண நியதிகளைத் கூறுகிறது. அவ்வகையில், இயற்தமிழை அழகு சேர்க்க இலக்கண விதிகள் பல் இருப்பினும் தமிழுக்கு

அழகு சேர்க்கும் வகைளுள் ஒன்று சிலேடையாகும். இதனை இரட்டுறமொழிதல் என்றும் கூறுவர். நுட்பமான கருத்துக்களையும், நகைசுவை கருத்துக்களையும் வெளிப்படுத்த செய்யுள் மற்றும் உரைநடைப்பகுதி ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.ன் இத்தகு தனிச்சிறப்புவாய்ந்த சிலேடையணி, பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் விதத்தைக் காண்போம்.

**சிலேடையணி**

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். செய்யுளில் அமைந்திருக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுத்துக் கூறுவது அணி இலக்கணமாகும். சிலேடையணியானது, நுட்பமான கருத்துக்களை சுவைபட கூறும் வகையிலும், படிப்போரையும், கேட்போரையும் சிந்திக்கத்துண்டும் வகையிலும் இலக்கியத்திற்கு அழகு சேர்க்கும் விதமாய் கையாளப்படுகிறது.

ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்று தெரிவுதர வருவது சிலேடை (தண்டியலங்காரம்:75) என்கிறது இலக்கணம். இரட்டுற மொழிதல் என்பது சிலேடை என வழங்கலாயிற்று. இதனை இரட்டுற மொழிதலணி என்றும் கூறுவர்.

இரட்டுற மொழிதல் : இரட்டு = இரண்டு; இரட்டுற மொழிதல் = இரண்டு உற மொழிதல். செய்யுளில் ஒரே சொல், இருவேறு பொருள்களைத் தருவது இரட்டுற மொழிதலணி எனப்படும்.

**சிலேடையின் வகைகள்**

இரட்டுற மொழிதல் அல்லது சிலேடை என்னும் அணியானது,

அ). செம்மொழிச் சிலேடை

ஆ). பிரிமொழிச் சிலேடை

என இருவகைப்படும்.

***அ) செம்மொழிச் சிலேடை***

ஒரு செய்யுள் அல்லது பாடலில் அமைந்திருக்கும் சொற்களைப் பிரிக்காமல் அதன் செம்மையான வடிவத்தில் இருக்கும்பொழுதே இரண்டு விதமான பொருள்களைத் தந்தால் அது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

உதாரணம்: வேலையில் மூழ்கிவிட்டான்

செயல் என்பதைக் குறித்துவருவது:

1. தன்னை சுற்றி நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி அறியாமல் தான் செய்கின்ற வேலையில் மூழ்கி இருத்தல். (வேலை = செயல்)

கடல் என்பதைக் குறித்துவருவது:

2. கடலில் மூழ்கி விட்டான். (வேலை = கடல்)

இதில் வேலை என்ற சொல்லானது இருவேறுவிதமாக பொருள்தந்து, செம்மொழி சிலேடையாகத் திகழ்கின்றது.

**ஆ) பிரிமொழிச் சிலேடை**

சொற்களைப் பிரிக்காமல் இருக்கும்பொழுது ஒரு பொருளும், பிரித்து நோக்கினால் வேறொரு பொருளும் தருவதாக அமைந்தால், அதனைப் பிரிமொழிச் சிலேடை என்பர்

எ.கா

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்

வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது

பொருள்:

பாம்பிற்கானது - பாம்பிற்கு விடம்(நஞ்சு) இருக்கும்; தனது தோலை உரித்துக்கொள்ளும்; சிவன் தலையில் இருக்கும்; அதன் பல் மற்றும் அதன்வழி அதன் விடம்(நஞ்சு) பட்டால் உயிர் தப்புவது கடினம், என பாம்பிற்கானதாக இச்செய்யுளின் பொருளைக்கூறலாம்.

வாழை பழத்திற்கானது -

வாழைப்பழமானது, நன்றாக பழுத்தால் நஞ்சி விடும் (நைந்திருக்கும்)

அதன் தோலை உரித்தால் தான் பழம் கிடைக்கும்; பஞ்சாமிர்தத்தில் ஒன்றாக வாழை பழம் அபிடேகம் செய்யும் போது சிவன் தலையில் வைக்கப்படுவதால் நாதர்முடி மேலிருக்கும் என பொருள்படும். மேலும், வெஞ்சினமாக வாழைப்பழத்தை சாப்பிடுகையில் வெண்மையான பற்கள் பட்டவுடனே வயிற்றுக்குள்ளே வென்றுவிடும் என்றவாறு வாழைப்பழத்தைக்குறிப்பதாகவும் இருவிதமாக பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது, சிலேடையணியின் சிறப்பாகும்.

**காளமேகப்புலவரும் சிலேடையும்**

காளமேகப்புலவர் என்னும் பெரும்புலவர் சிலேடையைச் சிறப்பாகக் கையாண்டவர். இறைவனின் அருளால் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நால்வகையிலும் கவிதைகளைக் கார்மேகம் போலே பொழிவதில் வல்லவராய் விளங்கினார். இவரது சிலேடை மொழித் திறமையை சில உதாரணங்கள் கொண்டு பார்க்கலாம்.

விநாயகர் முருகர் பரமசிவன் ஆகியோரை எவ்வாறு சிலேடையில் அமைத்துப் பாடியுள்ளார் என்பதை பின்வரும் பாடல்களில் காணலாம்.

சென்னிமுக மாறுளதாற் சேர்கரமுன் னாலுகையால்

இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால் - மன்னுகுளக்

கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்

எண்ணரனு நேரா வரே.

**விநாயகர்**

சென்னி முகம் மாறுளதால் என்பது, தலையும் முகமும் உடலமைப்பிற்கு மாறுபட்டுள்ளது; சேர்கரம் முன் நாலுகையால் என்பது முன்புறமாகத் தொங்கிக் கொண்டிருக்கின்ற துதிக்கை; இந்நிலத்திற்கோடு ஒன்று உருக்கையால் என்னும் வரி, இவ்வுலகத்தில் ஒற்றைக் கொம்பு அமைந்தவராய் இருக்கிறார்; மன்னு குளக்கண் உறுத்தலால் என்பது, வெல்லம் நிவேதனமாக இருக்கின்றது, என்பதாகப் பொருள்கொண்டு இச்செய்யுள் விநாயகரைக் குறிப்பதாக அமைந்துள்ளது என்றும் பொருள் கூறலாம்.

**முருகர்**

சென்னி முகம் ஆறு உளதால் என்பது ஆறு முகங்களைக் கொண்டவர்; சேர்கரம் முந்நாலு கையால் என்பது பொருந்திய கரங்களும் பன்னிரண்டாக கொண்டவர்; இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால் என்னும் வரி இவ்வுலகில் குன்றயே தான் இருக்கும் இருப்பிடமாக கொண்டிருக்கிறார்; (குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்), மன்னுகுளக்கண் உறுதலால் என்பது நிலைபெற்ற சரவணப் பொய்கையிலே அவதரித்தவர் என ஒவ்வொரு வரியையும் முருகப்பெருமானைக் குறிப்பதாகவும் பொருள் கூறலாம்.

**பரமசிவன்**

சென்னிமுகம் ஆறு உளதால் என்ற வரி, சிரசினிடத்தே கங்கையாறு உளதாயிருத்தல் என்றும்; முன்சேர்கரம் நாலுகையால் என்பது முன்புறத்தே தேர்ந்த ஒளியுள்ள கைகள் நான்கினை உடைத்தாயிருத்தல் எனவும் இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால் என்பது இவ்வுலகில் ஒரு மலை முடியான கைலாச பர்வதத்தை இருப்பிடமாகக் கொண்டிருப்பதையும்; மன்னுகுளக்கண் உறுதலால் என்பது நிலை பெற்ற நெற்றிக்கண்ணினை உடைத்தாயிருத்தல் என்பதாகவும் கொண்டு, இச்செய்யுள் பரமசிவனைக்குறிப்பதாகவும் பொருள் கூறலாம்.

இவ்வாறு மூவருக்கும் இச்செய்யுள் பொருந்துவதையும், இச்செய்யுள் நோக்கில் இம்மூவரும் சமம் என்பதையும் அழகுற எடுத்துரைக்க சிலேடையணி கையாளப்பட்டுள்ளது.

அதேபோல் வானவில், விஷ்ணு, வெற்றிலை ஆகியவற்றை,

நீரி லுளதா னிறம்பச்சை யாற்றிருவால்

பாரிற் பகைதீர்க்கும் பான்மையால் - சாருமனுப்

பல்வினையை மாற்றுதலால் பாரீர் பெருவான

வில்விண்டு நேர்வெற் றிலை

**வானவில்**

நீரினிடத்தேயிருந்து உளதானபடியினால்; நிறத்திலே பசுமை உள்ளபடியால்; அழகாயிருப்பதனால்; உலகில் வறட்சியினாலே உண்டாகும் பகைமையினை வளம் பெருக்க மழை வருகிறதென அறிவித்துத் தீர்த்துவைக்கின்ற தன்மையினாலும்; உலகியல் சார்ந்த மக்களின் பல்வகைத் துயரங்களையும் போக்குவதனால் வானவில்லாகவும்…

**விஷ்ணு**

நீரின்மேல் பள்ளிகொண்டிருப்பதலால்; பச்சைத் திருமேனியினை கொண்டதால்; திருமகளை தன்னிடத்தே கொண்டிருத்தலால்; உலகிடத்தே அறநெறிப் பகைஞரை அழித்து நல்லோர்களைக் காக்கும் தன்மையினால்; தன்னைச் சரணடையும் மனிதர்களின் பல்வேறு வினைகளையும் மாற்றி அவர்களுக்கு நற்கதியை அருளுவதனால் விஷ்ணுவாகவும்…

**வெற்றிலை**

நீர்க்கால்களிலேயே உண்டாவதனாலும்; பச்சை நிறத்தினை உடையதாயிருத்தலால்; மங்கலப் பொருளாக இருத்ததால்; உலகில் பகை தீர்க்கும் இடத்து நட்புக்கு அடையாளப் பொருளாக அமையும் தன்மையால்; தன்னைப் பொருந்திய மக்களுடைய பல வியாதிகளைப் போக்குவதனால் வெற்றிலை எனவும்; வானவில்லும் விஷ்ணுவும், வெற்றிலையும் தம்முள் சமமாகயிருப்பதாகப் பொருள்படும்படி இச்சிலேடையை உரைத்துள்ளார் காளமேகப்புலவர்.

காளமேகப்புலவரின் சிலேடையணிப் புலமைக்கு இவை சிறு உதாரணங்களேயாகும். மேற்போக்காகக் கேலிசெய்வது போலத் தோன்றுமாறும், அதே சமயம் நுட்பமான பொருள்வளம் அமையுமாறும் செய்யுள் செய்வதில் இவர் நிகரற்றவர்.

**இரட்டைப்புலவர்களின் சிலேடைப் பாடல்**

இரட்டைப்புலவர்கள் தங்களின் சிலேடை பாடல்களில் இரு பொருள் தருமாறு பாடியுள்ளனர். பாடலின் முன்னிரண்டு அடிகளை ஒருவர் எடுத்துப் பாட, பின்னிரண்டு அடிகளை மற்றவர் முடித்துப் பாடுவது இவர்கள் பாடும் சிலேடைப்பாட்டின் முறையாகும். இவர்களின் பாடல்களில் சைவப்பற்று ஓங்கியிருந்தது. சிவத் தலங்களுக்கு யாத்திரைச் சென்று சிவபெருமான் மீது பல பாடல்களைப் பாடினர். வரபதியாட்கொண்ட சேர மன்னன் மீதும் பல பிரபுக்கள் மீதும் பாடல்களைப் பாடி பாராட்டுகளும் பரிசில்களும் பெற்றுள்ளனர்.

அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாமதனைத்

தப்பினால் நம்மையது தப்பாதோ -இப்புவியில்

இக்கலிங்கம் போனாலென் னேகலிங்க மாமதுரைச்

சொக்கலிங்கம் தானிருக்கச் சொல்

மதுரைச் சொக்கநாதரையும் மீனாட்சி அம்மனையும் தரிசிக்கவேண்டி வைகை ஆற்றில் குளித்துவர இரட்டையர்கள் சென்றனர். கண்பார்வை இல்லாதவர் ஆடைகளைத் துவைத்துக் கொண்டிருந்தபோது ஆற்றுநீர் ஆடைகளை அடித்துச் சென்றது.

காலில்லாதவர் அவற்றைத் தாவிப் பிடிக்க முடியாமல், தண்ணீரிலே முழுதுமாக நனைத்து, மீண்டும் மீண்டும், நாம் அதனை(துணியை/உடலை) அடித்துத் துவைத்தால், நம்மை விட்டு அது விலகிச் செல்லாதோ, என்றுப் (மேற்காண்ட பாடலின் முதலிரண்டு அடிகளைப்) பாடினார்.

இதற்கு பதிலுரையாக, ஆடைகளைத் துவைத்துக் கொண்டிருந்த கண்பார்வை இல்லாதவர் மேற்கண்ட பாடலின் பின்னிரண்டு அடிகளைப் பாடி முடித்தார்.

நீரில் மூழ்கி எழுந்து (துணி / பலவினைகளில் உழன்று உடல்) நம்மைவிட்டுநீங்கினாலும், (அடுத்தப் பிறவியில் மற்றொரு உடலை எடுத்துக்கொண்டுவந்து வினைகளைத் தொடரச்செய்கின்றனவாக எப்படிப்பட்ட பிறப்பெடுக்கினும் எவ்வுடல் கொள்ளினும்) இறைவன் சொக்கநாதர் என்றும் துணையாய் இருக்கிறார்.

இவ்வாறு இரட்டைபுலவர்கள் தமது சிலேடைத்திறமையில் பக்தியை உலகயியலில் தொடர்புபடுத்திப்பாடியுள்ளது அவர்களது இலக்கிய இலக்கண நயத்தின் சிறப்பைக் காட்டுகிறது.

**பெரியபுராணம்**

சேக்கிழாரால் இயற்றப்பட்ட, இலக்கியச்சுவை மாறாமல் இலக்கண அமைதிகள் பல நிரம்பிய, அடியார்களின் உயரிய அருந்தொண்டுகளைப்பற்றி உரைக்கும் திருத்தொண்டர் புராணம் என்னும் மாக்கதையானது, 'பெரியபுராணம்' என்ற சிறப்புப்பெயர் பெற்றுப் போற்றியழைக்கப்படுகின்றது.

பல்வேறு இலக்கண நியதிகளைக் கையாண்டுள்ள சேக்கிழார் பெருமான், இலக்கணச்சுவையுடன் சிந்தனையைத்தூண்டும் விதமாகவும், சிலேடையணியை சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

**பெரியபுராணத்தில் சிலேடைப் பாடல்கள் -**

பெரியபுராணத்தில் முதல் சருக்கத்தில் திருநாட்டுச்சிறப்பினைக்கூறும் பகுதியில்,

**1) நான்முகனையும் காவிரியையும் குறிக்கும் சிலேடை**

மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்

சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்

கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையாற்

போலும்நான் முகனையும் பொன்னி மாநதி.

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-1:திருநாட்டுச்சிறப்பு:பாடல்-4)

மிகவும் பெருகிய நீர்ச்சுழியையும், மலர்களையும் தன்னகத்தேத் தாங்கி வரும் பெருமையாலும், பல்லுயிர்களையும் வளம் பெறச்செய்யும் அரிய குணத்தாலும், அழகிய கமண்டலம் தன்னைத் தாங்கும் சிறப்பினாலும் காவிரி, நான்முகனின் செயல்பாடுகளோடு ஒத்து இருக்கின்றது என்பதனை இப்பாடலின் மூலம் அறியமுடிகிறது.

இப்பாட்டின்கண் அமைந்த சொற்றொடர்கள் பலவும் காவிரிக்கும் நான்முகனுக்குமாக இருபொருள் பெற்றிருப்பதாய் அமைந்துள்ளது. இது சிலேடையணியாகும்.

நான்முகன்-பிரம்மாவைக் குறிப்பது

திருமாலின் உந்திச்சுழியிலிருந்து தோன்றிய பெருமையாலும், பல்லுயிர்கலையும் தோற்றுவிக்கும் பண்பினாலும், அழகான கமண்டலத்தைத் தாங்கிநிற்கும் தகைமையினாலும் பிரம்மைவைக் குறிக்கிறது.

(மால் - திருமால்; உந்திச்சுழி - கொப்பூழ்ச்சுழி; மலர்தல் - தோன்றுதல்; பல்லுயிர் தருதல் - பல உயிர்களையும் தோற்றுவித்தல்; குண்டிகை தாங்கல் - தன் கையில் கமண்டலத்தைக் கொண்டிருத்தல்.)

காவிரியைக் குறிப்பது

பெரிதாக பெருகிவரும் நீர்ச்சுழியுடன், பல்லுயிர்களுக்குத் தாகம் தீரவும், உணவுப்பயிர்களை விளைவிக்கப் பயன்படும் பொருட்டு, பசி தீர்த்துக் காக்கவும், அகத்தியரின் கமண்டலத்தில் இருந்து வந்தது என்றும் காவிரியைக் குறிக்கிறது.

(மால் - பெரிய; உந்திச்சுழி - பெருகி வரும் நீர்ச்சுழி; மலர்தல் - தாங்கிவருதல்; பல்லுயிர் தருதல் - பலவகைப்பட்ட உயிரினங்களுக்கு உணவு வழங்கல்; குண்டிகை தாங்கல் - காவிரியாய்ப் பெருகுவதற்கு முன் அகத்தியரின் கமண்டலத்தில் இருந்தது.)

இவ்வாறு இப்பாடல் நான்முகனுக்கும் காவிரிக்கும் ஆகிவந்துள்ளதைக் காணமுடிகிறது.

**2) காவிரிக்கும் கங்கைக்குமான சிலேடை**

திங்கள் சூடியமுடிச் சிகரத் துச்சியில்

பொங்குவெண் டலைநுரை பொருது போதலால்

எங்கள் நாயகன்முடி மிசைநின் றேயிழி

கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-1:திருநாட்டுச் சிறப்பு:பாடல்-5)

நிலவு தவழும் உயர்ந்த (சையமலை) மேற்குத்தொடர்ச்சி மலையின் உச்சியிலிருந்து பெருகி வருதலாலும், வெள்ளிய தலைபோலும் நுரைகளை வீசிக்கொண்டு போவதாலும், பொன்னி எனப்பெயர் பெற்ற காவிரி நதியானது, எமது முதல்வராகிய சிவபெருமானின் திருமுடியினின்றும் இந்நிலவுலகத்திற்கு வந்த கங்கையை ஒத்துள்ளது என இப்பாடலின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

காவிரியைக் குறிப்பது

மேற்குத்தொடர்ச்சி மலையின் உச்சியில், வெளுத்தத் தலை போன்று நுரையுடன் பெருகி வருகிறது காவிரி.

(சிகரத்து உச்சி - சையமலையின் உச்சி; வெண்தலை நுரை - வெள்ளிய தலை போன்ற நுரை.)

கங்கையைக் குறிப்பது

அயனால் முடிகாணமுடியாதவண்ணம் உயர்ந்து நின்ற சிவபெருமானின் திருச்சடையின் உச்சியிலிருந்து, இறைவனின் அடிமுடிக் காணவந்த சிறந்த மால் அயன் ஆகியோர்களின் தலைகளையும் தொட்டுச்சென்றது கங்கை.

(சிகரத்து உச்சி - உயர்ந்து விளங்கும் சிவபெருமானின் சடாமுடியின் உச்சி; வெண்தலை நுரை - சிறந்த மால் அயன் முதலியவர்களின் தலை.)

இப்பாடல், காவிரிக்கும் கங்கைக்கும் ஏற்பப் பொருள் கொள்ளும்படி அமைந்துள்ளது.

**3) காவிரிக்கும் உமையம்மைக்குமான சிலேடை**

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பே ரறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-1:திருநாட்டுச்சிறப்பு:பாடல்-6)

அழகான நீண்ட மேற்குத் தொடர்ச்சி மலையிடத்திலிருந்து தோன்றிய பெருமையாலும், எண்ணிறந்த பேரறங்களையாற்றுவதற்குகாக நீரை வழங்கிவரும் கொடைத்தன்மையினாலும் காவிரியும், இறைவனின் இடபாகத்தைத் தன் ஒரு கூறகக் கொண்டிருக்கும் உமையம்மையின் திருவுள்ளத்திலிருந்து கனிந்து வரும் கருணைப் பெருக்கையும் உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

காவிரியைக் குறிப்பது

மேற்குத்தொடர்ச்சி மலையில் தோன்றி, பெரிய அறங்களை செய்வதற்காக நீரை வழங்கிவருவதாக காவிரியைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

(வண்ண நீள் வரை - சைய மலை [மேற்குத்தொடர்ச்சி மலை]; எண்ணில் பேரறங்கள் - எண்ணற்ற பேரறங்கள்; தானமும் தவமும் வளர்தற்கு ஏது நீராதலால் எண்ணற்றப் பேரறங்களை வளர்ப்பதாயிற்று.)

உமையம்மையைக் குறிப்பது

அழகான இமயமலையின் அரசனான இமவானின் திருமகளாகிய மேன்மை குறித்தும், காஞ்சியிலிருந்து எண்ணற்ற அறங்களை வளர்த்துவருதலாலும் உமையம்மை குறித்துக் கூறப்பட்டுள்ளது.

(வண்ணநீள் வரை - இமயமலை. இதன் அரசனான இமவானின் திருமகள்; எண்ணில் பேரறங்கள் - தனது கருணையால் பேரறங்களைச் செய்பவர். காஞ்சிபுரத்தில் தன் துணைவன்பால் பெற்ற இருநாழி நெற்கொண்டு உலகில் முப்பத்திரண்டு அறங்களையும் செய்தவர்.)

இவ்வாறு காவிரிக்கும் உமையம்மைக்கும் ஆகப்பொருள் கொள்ளக்கிடப்பதாக சேக்கிழார் வடிவமைத்துள்ளார்.

**4) யானை - மலர்; வீடு - விளையாட்டு; மலர் மாலை — வரிசை ஆகியவற்றை இணைக்கும் சிலேடை**

மாடுபோ தகங்கள் எங்கும்

வண்டுபோ தகங்கள் எங்கும்

பாடுமம் மனைகள் எங்கும்

பயிலுமம் மனைகள் எங்கும்

நீடுகே தனங்கள் எங்கும்

நிதிநிகே தனங்கள் எங்குத்

தோடுசூழ் மாலை எங்குந்

துணைவர்சூழ் மாலை எங்கும்

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-2-திருநாட்டுச் சிறப்பு:பாடல்-33)

அனைத்துப்பக்கங்களிலும் யானைக்கன்றுகள் உள்ளன. மலரைச்சுற்றி வண்டுகள் உள்ளன. வீடுகள்தோறும் பாடல்களைப்பாடுவோர்களின் இசை மிகுந்துள்ளது. மகளிர் ஆடும் அம்மனைகள் எவ்விடத்தும் உள்ளன. நீண்ட கொடியாடைகள் அனைத்திடங்களிலும் உள்ளன. பொருளைப் பொதிந்து வைத்திருக்கின்ற கருவூலங்கள் எவ்விடத்தும் உள்ளன. இதழ் சூழ்ந்த மலர்மாலைகளானது எவ்விடத்தும் உள்ளன. எவ்விடத்தும் சூழ்ந்து நிற்கும் ஆடவர் வரிசைகள் உள்ளன.

மாடு என்பது பக்கம் எனப்படும். போதகங்கள் என வருவனவற்றுள் முதலில் வருவது ஒரு சொல்லாய், யானை எனவும், பின்னால் வருவது போது+அகங்கள் எனப் பிரிக்கப்பட்டு மலர்களிடத்து எனவும் பொருள்பட அமைகின்றது. இது யானைக்கும் மலருக்கும் ஆகிவரும் சிலேடையாகும்.

அம்மனை என்பதில் முன்னையது அழகிய மனை / அந்த மனை எனவீடுகளைப்பற்றியும், பின்னையது விளையாட்டு வகைளுள் ஒன்றையும் குறிக்கும். இது வீட்டிற்கும் விளையாட்டிற்கும் ஆகிவரும் சிலேடையணியாகும்.

கேதனம் — கொடி எனப்பொருள்படும். நிகேதனம் என்பது பொருள் வைப்பு-கருவூலம் எனப்படும்.

மாலை என்பது முதலில் வருவது மலர்மாலையையும், பின்னால் வருவது வரிசை என்ற பொருளையும் குறிக்கும். இது மாலையையும் வரிசையையும் குறிப்பதாகவரும் சிலேடையாகும்.

**5) ஆவண வீதிக்கும் அலைகடலிற்குமான சிலேடை**

விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்

துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்

வளத்தொ டும்பல வாறு மடுத்தலால்

அளக்கர் போன்றன ஆவண வீதிகள்

(பன்னிரண்டாம் திருமுறை:சரு-1;திருநகரச் சிறப்பு:பாடல்-9)

ஒளிமிக்க அணிகலன்கள் நிறைந்துள்ளக் கடை வீதிகளில், விற்பனை செய்வோர் வாங்குவோர்களின் பேச்சொலிகளும் நிறைந்துள்ளதானது, விளக்கொளி மிகுந்த மரக்கலங்கள் நிறைந்துள்ள கடலில் அலைகளின் மிகுதியால் எழும் பேரொலியுடன் பொருந்திவருவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

கடைவீதிக்கானது

கலன்கள் - அணிகலன்கள்; பேரொலி - வாணிகம் செய்வோரின் பேச்சொலி; துன்னு பண்டங்கள் - நெருக்கி வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு பொருட்கள்; பலவாறு மடுத்தலால் - பல்வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு காட்சிப்படுத்தபட்டிருத்தல் என கடைவீதியைப் பற்றிக்கூறப்பட்டுள்ளது.

கடலுக்கானது

கலன்கள் - மரக்கலங்கள்; பேரொலி - அலைகளால் ஏற்படும் ஒலி; துன்னு பண்டங்கள் - மலை மற்றும் நிலம் வழியாக வரும் ஆறுகளால் அடித்துக்கொண்டுவரப்பட்டிருக்கும் பொருட்கள்; பல ஆறு மடுத்தலால் - பல ஆறுகளும் வந்து கலத்தலால் என கடல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**6) நான்முகனுக்கும் தில்லைப்பதிக்குமான சிலேடை**

பார்வி ளங்கவளர் நான்மறை நாதம்
பயின்ற பண்புமிக வெண்கொடி யாடும்
சீர்வி ளன்ங்குமணி நாவொலி யாலும்
திசைக ணான்கெதிர் புலப்பட லாலும்
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொற்
சதுர்மு கங்களென வாயின தில்லை
ஊர்வி ளங்குத்திரு வாயில்கள் நான்கின்
உத்த ரத்திசை வாயின்மு னெய்தி

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-1:தடுத்தாட்கொண்ட புராணம்:பாடல்-97)

உலகத்தார் அறநெறி வழுவாமல் இருப்பதற்கு ஏதுவாக வளர்கின்ற நான்மறைகளின் ஒலி, அங்குள்ளோர் பலரும் ஓதுவதால் மிகுந்து இருக்கவும், வெண்மையான கொடிகள் அசையவும், சிறப்புமிக்க நன்மணிகளின் ஒலி எழவும், அவ்வொலி நாற்திசைகளிலும் வெளிப்படவும், மாலையை அணிந்த மலை போலும் மார்பினையுடைய நான்முகனின் அழகிய முகங்கள் போன்றிருக்கும் நான்கு வாயில்களையுடைய தில்லைப்பதியின்கண் வடக்குவாயிலின் திருமுன்பு அடைந்து எனவரும் இப்பாடலில் நான்முகனுக்கும் தில்லைப்பதிக்கும் பொதுப்பட அமைத்துள்ளார் சேக்கிழார் சுவாமிகள்.

நான்முகனைக் குறிப்பது

நான்கு மறைகளைப் பயின்ற நாவினையும், அந்நாவின்கண் கலைமகள் வீற்றிருந்து இடையறாது ஒலித்தலையும், நான்கு முகங்களை உடையவர் என்பதையும் குறித்து நான்முகனைக் குறிப்பிடுகிறார்.

தில்லைப்பதியைக் குறிப்பது

நான்மறைகளும் இடையறாது பயிலப்பட்டு வருதலும், கட்டப்பட்ட வெண்கொடிகள் பலவும் அசைந்து விளங்குதலால் கேட்கப்படும் மணிகளின் ஒலியும், நான்கு வாயில்களை உடையதுமானது தில்லை எனப் பொருள்பட உரைத்துள்ளார்.

இவ்வாறு இரண்டிற்குமாகி வந்துள்ளது இப்பாடல்.

**7) பெண்கள் மற்றும் கடல் குறித்த சிலேடை**

சாயுந் தளிர்வல்லி மருங்குல்

நெடுத்த டங்கண்

வேயும் படுதோளியர் பண்படும்

இன்சொற் செய்ய

வாயும் படும்நீள்கரை மண்பொரும்

தண்பொ ருத்தம்

பாயுங் கடலும்படும் நீர்மை

பணித்த முத்தம்

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-4:மூர்த்தி நாயனார் புராணம்:பாடல்:2)

அன்பின் தன்மையை வெளிபடுத்துவதன் ஒருபகுதியான முத்தம், தளிர்களையுடைய சாயும் தன்மையதான கொடிபோன்ற சிற்றிடையையும், நெடிய அலர்ந்த பெரிய கண்களையும், மூங்கிலின் வனப்பையொத்த மிருதுவான தோள்களையும் உடைய பெண்களது பண்களின் இசையொத்த இன்சொற்களையுடைய வாயினிடத்தும் பொருந்துவனவாகும். அதுமட்டுமல்லாது, நீண்ட கரையில் உள்ள மண்ணுடன்கூட புரளும் அலைகளையுடைய தாமிரபரணி ஆறு பாயும் கடலினிடத்திலும் தோன்றுகின்றன. பெண்களைக்குறிக்கையில் அன்பின் நீர்மையால் வெளிப்பட்ட முத்தம் என்றும், கடலைக்குறிக்கையில் நீரோட்டத்துடன்கூடிய குளிர்ந்த முத்துக்கள் என்றும் பொருள்பட குறிப்பிட்டுள்ளார் சேக்கிழார் பெருமான்.

**8) தென்றல் காற்றிற்கும் தமிழுக்குமான சிலேடை**

மொய்வைத்த வண்டின் செறிசூழல்

முரன்ற சந்தின்

மைவைத்த சோலை மலையந்தர

வந்த மந்த

மெய்வைத்த காலும் தரும்ஞாலம்

அளந்த மேன்மைத்

தெய்வத்தமி ழுந்தருஞ் செவ்வி

மணஞ்செய் ஈரம்

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-4:மூர்த்தி நாயனார் புராணம்:பாடல்:3)

நறுமணத்துடன் கூடிய குளிர்ச்சியை, நெருங்கிய வண்டினங்கள் திரண்டு தங்கி சப்திக்கின்ற சந்தன மரங்கள் அடர்ந்த கருமைபடர்ந்த சோலைகளையுடைய பொதியமலை மென்மையாக வீசுகின்ற தென்றல் காற்றைத் தரும்; நன்மணத்தை விளைவித்தற்குரிய அன்பினை இந்நிலவுலகை அளந்த மேன்மையுடைய தெய்வத்தமிழும் தரும் என்பது இப்பாடலின் கருத்தாகும். செவ்வி மணம் செய் ஈரம் என்பது தென்றல் காற்றிற்கு எனும்போது நறுமணம் பொருந்திய குளிர்ச்சி எனப்பொருள்படும்; தமிழுக்கு எனும்போது நன்மணத்தை விளைவிப்பதற்குரிய அன்பு எனப் பொருள்படும். தென்றல் காற்றால் உடலும், தமிழால் உணர்வும் தழைக்கும். புற-அக நிலையைக் குறித்துவருகின்றன. நன்மணம் — நன்றாகக் கலத்தல்; ஒருவரோடொருவர் மனம் பொருந்தி வாழ்தல் அன்பின் வழியது உயிர்நிலை என்பதை உணர்த்தும். அகவாழ்விற்கும் இறையுணர்விற்கும் இதுவே பெருங்கருவியாகும். இதனை விளைவிக்கும் தமிழானது தெய்வத்தமிழ் என்று சிறப்பிக்கப்படுகிறது.

**9) மதுரை — குளம் பற்றிய சிலேடை**

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய

அங்கண் மூதூர்

நூல்பா யிடத்தும் உளநோன்றலை

மேதி பாயப்

பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம்

பாய எங்கும்

சேல்பாய் தடத்தும் உளசெய்யுள்மிக்

கேறு சங்கம்

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-4:மூர்த்தி நாயனார் புராணம்:பாடல்:5)

'செய்யுள் மிக்கு ஏறு சங்கம்' என்னும் தொடர் மதுரையைக் குறித்து, செய்யுள்கள் பலவும் ஆராய்தற்கு இடமான சங்கங்களைக் கொண்டது எனப்பொருள்படவும்; செய்+உள்+ஏறு+சங்கம் என மீன்கள் பாய்கின்ற குளத்தில் எனப்பொருள் கொண்டு வயல்களில் பொருந்தி ஏறுகின்ற சங்குகள் என இருபொருள்பட உரைத்து தமது சிலேடைத்திறனால் பாடல் அமைத்துள்ளார்.

புலவர்கள், பண்பாட்டை விளைவிக்கும் இயல், இசை, நாடகமெனும் முத்தமிழும் நிலைபெற்ற மதுரைஎனும் திருப்பதியின்கண் நூல்கள் பயிலப் பெறும் இடங்களில் சங்கங்கள் உள்ளன என்றும் வலிவுடைய எருமைகள், சங்குகள் தவழ்கின்ற வயல்களில் பாய, அவற்றின் மடியிலிருந்து பெருகிய பாலானது தேன் தோய்ந்த தாமரைகளில் பாயச் சேல்மீன்கள் எங்கும் பாய்தற்கு இடமான குளங்களும் உள்ளன என்றும் இருபொருள்களைக் குறித்து இப்பாடலை சேக்கிழார் அமைத்துள்ளார்.

### 10) தேனையும் கண்ணீரையும் குறிக்கும் சிலேடை

வண்டு பாடப் புனல்தடத்து

மலர்ந்து கண்ணீர் அரும்புவன

கொண்ட வாச முகையவிழ்ந்த

குளிர்பங் கயங்க ளேயல்ல

அண்டர் பெருமான் திருப்பாட்டின்

அமுதம் பெருகச் செவிமடுக்குந்

தொண்டர் வதன பங்கயமுந்

துளித்த கண்ணீர் அரும்புமால்

(பன்னிரண்டாம் திருமுறை:சருக்கம்-4:முருக நாயனார் புராணம்:பாடல்:4)

வண்டுகள் சூழ்ந்து பாடக்குளங்களில் மலர்ந்து (கள்+நீர்=கண்ணீர்) தேனும் வாசனை கொண்ட முகை அவிழ்ந்து மலரும் தாமரைகளையும், சிவபெருமானின் திருமுறைத் திருப்பாடல்களின் அமுதத்தைக்கேட்டு இன்புறும் தொண்டர்களின் முகத்தாமரையில் துளிர்க்கும் கண்ணீரையும் குறிப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

### தொகுப்புரை

பெரும்பாலான கவிஞர்கள் தாங்கள் பாடுகின்ற பாடலில் ஒரு பொருளை உணர்த்துவதாக அமைத்துப் பாடுவர். சில சமயங்களில் ஒரே பாடலில் இருவேறு பொருள் அமையுமாறும் பாடுவர். பலபொருள்ளை உணர்த்தும் சொல்லும், சொற்களைப் பிரிப்பதற்கு ஏற்றவாறு பல பொருள் தரும் சொற்தொடரும் உண்டு. இத்தகைய சொற்களையும் சொற்தொடர்களையும் கையாள்வதை இரட்டுற மொழிதலணி அல்லது சிலேடை அணி என்று கூறுவர். சேக்கிழார் தம் பெரியபுராணத்தின் சுவையை மேலும் கூட்டவும் மெருகேற்றவும் இச்சிலேடையணியினை ஆங்காங்கே கையாண்டுள்ளார் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

மேலும் இச்சிலேடையானது ஒரு சொல்லைக்கொண்டும், ஒரு சொற்றொடரைக்கொண்டும், பல்வேறு பொருள்களை அறிந்துகொள்ள துணைபுரிகின்றது. இலக்கிய இலக்கண வல்லவர் பலரும் தமது இலக்கியங்களிலும் சொற்பொழிவுகளிலும் சிலேடையணியைச் சிறப்பாகக் கையாண்டுள்ளனர். பல இலக்கிய இலக்கண வளங்களைக் கொண்டமைந்துள்ள பெரியபுராணத்திற்கு, சிலேடையணியானது மேலும் அணிசேர்க்கின்றது.

இலக்கியப் பயிற்சியானது நுட்பமான அறிவு நலத்தைப் பெறுவதற்கும், ஒழுகலாறுகளை நெறிப்படுத்துவதற்கும் பயன்படவேண்டும். ஒருவகையான சொல்லமைப்புக்கள், அவற்றைப் பிரிக்கும் திறனால் இரண்டு மூன்று வகையான பொருள் அமைதிகளைத் தருகின்றன. இதற்கு சொல்லாளுமையும், இலக்கண அறிவும் வேண்டும். சொல்லவரும் கருத்துக்களில் தெளிவும் இருத்தல் அவசியம்.

சேக்கிழாரின் பெரியபுராணத்தில் அமைந்து அணிசெய்யும் சிலேடையணி, சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் இலக்கியத்தைச் செம்மைபடுத்துவதாகவும் அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. காளமேகப் புலவர் தனிப்பாடல்கள், திரு. புலியூர் கேசிகன், முதற்பதிப்பு 2010, மங்கை வெளியீடு, சென்னை — 18
2. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் — பன்னிரண்டாம் திருமுறை முதற்காண்டம் & இரண்டாம் காண்டம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை — 609 001
3. தொல்காப்பிய முழுவதும் விளக்கவுரை, முனைவர். ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001
4. பன்னிரு திருமுறை விளக்கம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை — 609 001
5. பெரியபுராணம், சேக்கிழார் ஆய்வு மையம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுர ஆதினம், மயிலாடுதுறை - 609 001
6. பேராசிரியர். முனைவர். பாக்யமேரி, வெற்றி நோக்கில் இலக்கணம் இலக்கிய வரலாறு மொழித்திறன், பூவேந்தன் பதிப்பகம், சென்னை - 4
7. www.tamilvu.org

*Bibliography*


1. *Kalameka Pulavar Thani Padalgal, Mr. Puliyur Kesigan, First Edition 2010, Mangai Publication, Chennai — 18*
2. *Panniru Thirumurai Vilakkam, Gnanasambandam Padhippagam, Darumai Aadheenam, Mayiladuthurai — 609 001*
3. *Periyapuranam, Sekkizhar Research Centre, Gnanasambandam Padhippagam, Darumapura Aadheenam, Mayiladuthurai - 609 001*
4. *Sekizhar Thirutondar Puranam — Pannirandaam Thirumurai, Gnanasambandam Padhippagam, Darumai Aadheenam, Mayiladuthurai — 609 001*
5. *Tolkappyam Muzhuvadhum - Vilakka Urai, Dr. S.V. Subramanian, Meiyappan Padhippagam, Chidambaram - 608 001*
6. *Vetri Nokkil ilakkana ilakkia Varalaaru Mozhiththiran, Prof., Dr. Bhagyameri, Bhuvendan Padhippagam, Chennai - 4*
7. www.tamilvu.org

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com